STATE LEGISLATURE LIBRARY, MADRAS
5 - JUN 1958

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 13th November 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Armed Police in the Anamalais

* 151 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any Armed Police are stationed in the Anamalais, Coimbatore district; and

(*b*) if so, the amount spent on their pay and other allowances?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) Rs. 2,579·28 nP. per month.

SRI N. K. PALANISAMI: ஸார், அங்கு போலிஸ் படையை வைத்திருப்பது அங்குள்ள தொழிலாளர்களை பயமுறுத்தவதற்கா அல்லது வேறு எதாவது காரணம் உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: தொழிலாளர்களை பயமுறுத்துவதற்காக வைக்கப்படவில்லை. அங்கு தொழிலாளர்களுக்கும் இருக்கின்ற சங்கங்களுக்கும் போட்டி இருக்கிறது. இதனால் அங்கு பலாத்காரம் ஏற்படும். அதை தவிர்ப்பதற்காகத்தான் போலீஸ் படை வைக்கப்பட்டிருக்கிறது.

'Marking system' in elections

* 152 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have received recently any communications from the Centre about 'Marking system' to be introduced in future elections;

(*b*) if so, the details thereof; and

(*c*) the nature of the reply sent to the Central Government?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) Yes, Sir.

(*b*) The Government of India sent a copy of their Notifications containing amendments to the Representation of the People (Conduct of Elections and Election Petitions) Rules, 1956, providing for the adoption of the method of voting by marking the ballot paper at elections in Assembly and Parliamentary constituencies. The Election Commission is empowered, under the amended rules, to

direct by notification in the official Gazette that the method of voting by marking the ballot paper shall be followed at an election at such polling station or stations as may be specified in the notification. The amended rules provide also for the arrangements of polling compartments, ballot papers and other election materials to be provided at the polling stations and the procedure to be followed under the new system of voting.

The Election Commission, India, sent a reference calling for the view and suggestions of the State Government in regard to the details of the working of the ' marking system ' for adoption at future elections.

(*c*) The Election Commission has been informed that there may be no great difficulty in adopting the new system. Certain suggestions have been made in regard to the printing of ballot papers, the arrangements to be made in the polling compartments and polling stations and in regard to extending the hours of poll.

Sri N. K. PALANISAMI : ஸார், வோட்டுச்சாவடிகளில் குறி போடுகிற முறை ஆங்காங்கு இருக்கக்கூடிய படித்தவர்களையும் படிக்காதவர்களையும் டெஸ்ட் செய்வதற்கா ? அல்லது திருட்டு வோட்டுகளை தடை செய்வதற்கா ? என்பதை கேட்க ஆசைப்படுகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : நல்ல முறையில் வோட்டு போட செய்யவேண்டும் என்பதற்காகத்தான் இந்த முறை கொண்டு வரப்பட்டிருக்கிறது. வோட்டர்களை படிப்படியாக இந்த முறையில் பழக்க வேண்டியது அவசியம். இதற்காகத்தான் முதலாவது நிறமுள்ள பெட்டிகளை வைத்திருந்தோம். அதன் பின்னால் சின்னங்கள் உள்ள பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தது. இதன் பின் குறி போடுகிற முறை ஏற்படுத்த வேண்டும் என்று நினைத்துத்தான் இப்போது இதை கொண்டு வரப்பட்டிருக்கிறது.

Sri M. KALYANASUNDARAM : இந்த பாலட் பேப்பரில் பெயர்கள் மாத்திரம்தான் இருக்குமா அல்லது சின்னங்களும் இருக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சின்னங்களும் இருக்கும்.

Sri S. PAKKIRISAMI PILLAI : இந்த பாலட் பேப்பரில் ஒரு பெயரின் நேரே இரண்டு குறிகள் போட்டுவிடுவதால் வோட்டுகள் தள்ளப்படுகிறது. இதை தடுப்பதற்கு ஏதாவது நடவடிக்கை சர்க்கார் எடுத்திருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதாவது இரண்டு பேருக்கு நேரே போட்டால்தான் அது தள்ளுபடியாகும். ஒரு பேரின் நேரே போட்டால் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இதைப்பற்றி எலக்ஷன் கமிஷன் கவனிக்க வேண்டியது. இந்த சர்க்காரை பொறுத்தவரையில் இது சாத்தியம் என்கின்ற முறையில்தான் இந்த முறையை ஒத்துக் கொண்டிருக்கிறது.

Sri S. LAZAR : இந்த குறியிடும் முறையானது ஒவ்வொரு கிராமத்திலும் அனுசரிக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொதும்கூட முனிசிபல் தேர்தல் டிஸ்ட்ரிக்ட் போர்டு தேர்தல் இவைகளில் இந்த முறைதான் அனுசரித்தோம். அதை வைத்து பரிசீலனை செய்துதான் இதை நாம் ஏற்றுக்கொண்டு இதை ஒத்துக்கொண்டிருக்கிறோம். அதிலும் இதை கொண்டு வருவதில் கஷ்டங்கள் ஏற்படாத முறையில்தான் கொண்டு

13th November 1957]

வர வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இது எந்தெந்த போலிங் ஸ்டேஷனில் கொண்டு வரலாம் என்பதை பரிசீலனை செய்து எந்தெந்த பகுதிகளில் கொண்டு வரலாமோ அந்த தொகுதிகளில்தான் கொண்டு வரப்படும். அதற்கேற்ற வகையில்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மக்களுக்கு கஷ்டம் ஏற்படாத முறையில் சிறிது சிறிதாகத்தான் இந்த முறை கொண்டுவரப்படும்.

Sri M. JAGANNATHAN : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களின் படிக்கத் தெரியாதவர்கள் அதிகமாக இருப்பதினால் இந்த முறையை நகரப்புறங்களில் மாத்திரம் இந்த குறியிடும் தேர்தல் முறையை அனுசரிக்க சர்க்கார் முன் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதை எலக்ஷன் கமிஷன் கவனித்து வேண்டிய முடிவு செய்யும்.

Sri A. A. RASHEED : Is the Hon. Minister aware that there is the possibility of a large number of votes being declared void by adopting the system of marking?

The Hon. Sri C. SUBRAMANIAM : I am sure a few votes might become invalid. I do not think that a large number of votes will become invalid. But this matter will have to be considered by the Election Commission and proper decisions taken.

Sri M. P. SUBRAMANIAM: ஸார், 1953-ல் தமிழகத்தில் எல்லா ஜில்லா போர்டு தேர்தல்களிலும் இதே முறையைத்தான் அனுசரித்து வந்ததாக தெரிகிறது. அதன்பின் கழிந்த இரண்டாவது பொது தேர்தல்களிலும் பழைய முறைதான் அனுசரிக்கப்பட்டு வந்தது. இந்த இரண்டு தேர்தல் களிலும் செல்லுபடியான வோட்டுகள் எத்தனை பதிவான வோட்டுகள் எத்தனை என்பதை கூற முடியுமா ? எத்தனை சதவிகிதம் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்கு தனி கேள்வி வேண்டும்.

Sri P. G. MANICKAM : தற்போது இந்த முறை பஞ்சாயத்து தேர்தல்களிலும் கொண்டுவரப்படுவதாக தெரிகிறது. இது எப்போது நடைமுறைக்கு வரும் என்பதை தெரிவிக்க முடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்கு தனி கேள்வி என் சகா மந்திரி அவர்களுக்கு கனம் அங்கத்தினர் அவர்கள் போடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

Sri N. K. PALANISAMI : வோட்டுச் சாவடிகளில் இந்த குறியிட்டு போடக்கூடிய முறை ஏற்படுத்தப்பட்டால் இதை சரியாக போடு கிறார்களா என்பதை உள்ளே சென்று பார்ப்பதற்கு பிரைஸைடிங் ஆபீஸர் களுக்கு வசதி செய்து கொடுக்கமுடியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : வோட்டு போடும் பெட்டி அங்குள்ள ஆபீஸர் முன்னால்தான் வைக்கப்பட்டிருக்கும். பாலட் பேப் பரில் மார்க் செய்து பிரைஸைடிங் ஆபீஸர் முன்னால் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில்தான் போடவேண்டும்.

Sri M. C. MUTHUKUMARASWAMY : இந்த அடையாளம் போடும் முறையில் குறுங்கோட்டை உபயோகிக்கப்போகிறீர்களா அல்லது நெடுங் கோட்டை உபயோகிக்கப்போகிறார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : குறுங்கோடோ, நெடுங்கோடோ ஏதாவது ஒரு கோட்டை ஒப்புக்கொண்டுதான் இது கொண்டுவரப்படும்.